**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 85/2025**

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. ஜெகதீஸ்குமார்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. அந்தோணி முத்து** | **Calling** | : | |
| **Village** | : | **சவேரியார்பாளையம், நேருஜி நகர்** | **Religion** | : | **கிருஸ்துவர்** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **44** |
| | | | **Dated** | : | **29.07.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**Accused absent, petition filed and allowed.**

அ.சா. 2 (பட்டியல் சாட்சி 2), **திரு. ஜெகதீஸ்குமார்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து CKCM தோல் ஷாப் வைத்து வேலை செய்து வருகிறேன். எதிரி சக்திவேலைத் தெரியும். என்னிடம் சவேரியார்பாளையத்தை சேர்ந்த ஜான்பால் என்பவர் அவரது குடும்ப தேவைக்காக ரூ. 4,50,000/-த்தினை ஏலச்சீட்டு கடனாக வாங்கிக் கொண்டு, திருப்பி தராமல் ஊரை விட்டுச் சென்றுவிட்டார். 11.03.2024 ம் தேதி மாலை சுமார் 04.30 மணிக்கு சவேரியார்பாளையம், நேருஜிநகர், 1-வது சந்து, பாய் கடை அருகே நானும், அசா. 1ம் மற்றும் எனது தம்பி சுரேஷ்குமார் ஆகிய மூவரும் பேசிக் கொண்டு இருந்தபோது, அந்த வழியாக வந்த ஜான்பால் மகன் ஹரி என்பவர் வந்தார். அவரிடம் ஜெகதீஸ்குமார் உங்க அப்பா பணத்தை திருப்பி தராமல் ஓடிவிட்டார்.

தற்போது அவர் எங்கு இருக்கிறார் என்று கேட்டபோது, எதிரி சக்திவேல் அப்போது அங்கு வந்து ஏன் சின்னபையனிடம் பணத்தை கேட்கிறீர்கள் என்று என்று மிரட்டினர். நாங்கள் பேசிவிட்டு வீட்டிற்கு அசா. 1ன் வீட்டிற்கு சென்றுவிட்டோம். அன்று மாலை சுமார் 05.00 மணி அளவில் எங்கள் வீட்டில் நானும், சுரேஷ்குமார் இருந்தபோது, எதிரி சக்திவேல் எங்கள் வீட்டிற்கு முன்பு வந்து நின்று கொண்டு, டேய் வீட்டிற்குள் யார் இருக்கிறார் வெயியே வாங்கடா, தேவிடியா மகனே, புண்ட மகனே வெளியே வாங்கடா என்று சத்தம் போடவே நாங்கள் மூவரும் வீட்டிற்கு வெளியே வந்தோம். அப்போது எதிரி சக்திவேல், சுரேஷ்குமாரை அடித்து கீழே தள்ளிவிட்டார். அதை அசா. 1 விலக்க சென்றபோது எதிரி சக்திவேல் அவர் மறைத்து வைத்து இருந்த கத்தியை எடுத்து, இத்தோடு செத்து தொலைந்து போடா என்று சொல்லி, அசா. 1 ன் இடது பக்க கன்னத்தில் வெட்டியதில் பலத்த இரத்த காயம் ஏற்பட்டது. திரும்பவும் எதிரி சக்திவேல் கத்தியால் அசா. 1 ன் வயிற்றில் குத்த வரவே, அவரது இடது கை மோதிர விரலில் கிழித்து இரத்த காயம் ஏற்பட்டது. அருகில் இருந்த நானும், சுரேஷ்குமார் வரவும், எதிரி சக்திவேல் பணத்தை திருப்பி கேட்டால் உங்களை உயிருடன் விடமாட்டேன் என்று கத்தியைக் காட்டி மிரட்டிவிட்டு, கத்தியுடன் ஓடிவிட்டார். நானும், சுரேஷ்குமாரும் ஒரு போக்கு ஆட்டோவில் அசா. 1 ஐ ஏற்றி திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். அதன் பிறகு மாலை 05.30 மணிக்கு மேல் எனது வீட்டிற்கு சென்றபோது, அங்கு எனது அம்மா முத்தம்மாள் வீட்டில் இருந்தார். என் வீட்டினுள் Fan, TV – 2, Washing Machine, Dressing Table உடைக்கப்பட்டு சிதறிக்கிடந்தது. நான் மருத்துவமனைக்கு சென்றிருந்த சமயத்தில் எதிரி சக்திவேல் எனது வீட்டிற்கு வந்து, மேற்படி பொருட்களை சேதப்படுத்தி ஓடிவிட்டதாக ஜெயசீலன், மத்தியாஸ்

ஆகியோர் என்னிடம் சொன்னார்கள். சேதமான பொருளின் மதிப்பு ரூ. 48,500/- ஆகும். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>** இல்லை.

R V RAJA KUMAR

Digitally signed by R V RAJA KUMAR
Date: 2025.07.29 18:58:05 +0530